சப்ரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம் - வாரப் பாடசாலை

வரலாறு 2ம் வாரம்

தரம் - 10

ஆக்கம் :-திருமதி S.சுஜிதா (கே / தெஹி களனி த.வி)

01)பின்வரும் வினாக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.திவங்க சிலைமனை அனுராதபுரத்திலுள்ளது. ( )

2.முதலாம் விஜயபாகுவிற்கு பின் பொலன்னறுவை ஆட்சிபீடத்திற்கு வந்த தலைவன் நிசங்கமல்லனே. ( )

3.அனுராதபுர இராசதானியின் இறுதி ஆட்சியாளன் 5ம் மகிந்தன் ஆவான். ( )

4.பொலன்னறுவை நகரை அபிவிருத்தி செய்ததுடன் நாடளாவிய ரீதியில் நீர்ப்பாசன நடவடிக்கைகளை மேற்கொண்டு மீண்டும் செழிப்பான யுகம் ஒன்றை உருவாக்கியவன் 1ம் பராக்கிரமபாகுவே ஆகும். ( )

5. முதலாம் விஜயபாகுவின் மறைவையடுத்து இந்நாட்டில் கலிங்க பாண்டிய வம்சத்தவருக்கு இடையில் அதிகார போராட்டம் உக்கிரமடைந்தது. ( )

6.கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு கி.பி.1315 ஆம் ஆண்டளவில் இலங்கையில் ஏற்பட்டது. ( )

7.மாகன் தனது படைகளைக் கொண்டு இலங்கை நீர்ப்பாசனத் துறையை சீரழிவுக்கு உட்படுத்தினான்.( )

02.பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1.பொலன்னறுவை இராசதானியின் வீழ்ச்சிக்கு ஏதுவாக அமைந்த காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக.

2.பொலன்னறுவை இராசதானியின் வீழ்ச்சிக்கு உடனடிக் காரணமாக அமைந்தது என நீர் கருதும் விடயம் யாது?

3.முதலாம் பராக்கிரமபாகுவின் மரணம் சம்பவித்த ஆண்டு எது?

4.பொலன்னறுவை இராசதானி வீழ்ச்சியடைந்த ஆண்டு எது?

5.பொலன்னறுவை இராசதானியில் ஆட்சி நிலவிய காலப்பகுதி எத்தனை வருடங்கள்?

6.பொலன்னறுவை இராசதானியை ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் எத்தனை பேர்?

7.நிங்கமல்ல மன்னன் பொலன்னறுவை ஆட்சி செய்த ஆண்டுகள் எத்தனை?

8.நிசங்கமல்ல மன்னின் மறைவையடுத்து ஆட்சி பீடமேறிய ஆட்சியாளர்கள் யார்?

9.முதலாம் பராக்கிரமபாகுவின் மனைவி யார்? அவர் எத்தனை முறை ஆட்சி பீடம் ஏறினார்?

10.பொலன்னறுவை இராசதானியின் வீழ்ச்சிக்கு ஏதுவாக அமைந்த பொருளாதார வீழ்ச்சிப் பற்றி சுருக்கமாக விளக்குக.

11.கலிங்க நாட்டிலிருந்து மாகன் பாரிய படையணியுடன் இலங்கையை ஆக்கிரமித்த ஆண்டு எது?

12.மாகனின் ஆக்கிரமிப்பால் ஏற்பட்ட அழிவு நாசம் பற்றி மகாவம்சம் குறிப்பிடும் விடயம் யாது?

13.மத்திய நிர்வாகத்திலிருந்து பிரிந்த சில பிரதேசங்கள் எப் பிரதேசங்களாக மாறின?

14.காலிங்க மாகனின் கொடூரத் தன்மையின் காரணமாக பௌத்த பிக்குகளும் பொது மக்களும்

பாதுகாப்பு கருதி இடம் பெயர்ந்த பிரதேசங்கள் எவை?

15.புராதன நாகரீகங்களின் வீழ்ச்சிக்கு ஏதுவாக இமைந்த காரணிகள் எவை?

16. இரண்டாம் நகரமயமாக்கம் இலங்கையின் எப்பகுதியில் உருவாக்கம் பெற்றது?

17.முதலாம் இரண்டாம் நகரமயமாக்கல் தலைநகரங்களுக்கிடையிலான வேறுபாடுகள் நான்கினைக் குறிப்பிடுக.

18.கலிங்க மாகனின் ஆட்சிக் காலத்தில் ஆட்சி புரிந்த பிரதேசத் தலைவர்களின் ஆட்சி நிலையங்களைக் குறிப்பிடுக.

| ரட்டைப் பகுதி | இராசதானிகள் | ஆட்சியாளர்கள் |
|---|---|---|
| 1.மாயரட்டை | | |
| 2.மாயரட்டை | | |
| 3.உறுகுணரட்டை | | |
| 4.உறுகுணரட்டை | | |

19.வரலாற்று ரீதியான இராஜரட்டைக்குரிய முதலாவது நகராக்க அட்சிநிலையங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

20.வரலாற்று ரீதியான மலையகரட்டைக்குரிய இரண்டாவது நகராக்க ஆட்சி நிலையங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

21.வரலாற்று ரீதியான மாயரட்டைக்குரிய இரண்டாவது நகராக்க ஆட்சி நிலையங்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.

22.கி.பி. 1232 – 1236 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் தம்பதெனியாவைத் தனது நிர்வாக மத்திய நிலையமாகக் கொண்டு ஆட்சி செய்த மன்னன் யார்?

23.தம்பதெனியாவைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த மன்னன் யார்?

24.மூன்றாம் விஜபாகு மன்னன் தம்பதெனியாவின் சிறந்த ஆட்சியாளனாக கருதப்பட்டமைக்கு ஏதுவான காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக.

25.மூன்றாம் விஜயபாகு மன்னன் மரணடடைந்த ஆண்டு எது?